நகராட்சி அலுவலகம்
திருவத்திபுரம்.

**மன்ற கூட்ட அறிவிப்பு**

திருவத்திபுரம் நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் 31.10.2020 ஆம் நாள் சனிகிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத்தின் சாதாரணக் கூட்டம் கீழ்கண்ட பொருளை முடிவு செய்ய நடைபெற உள்ளது.மேற்படி கூட்டத்தில் துறை சார்ந்த அலுவலர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி

293

**பொருள் எண்:1**

திருவத்திபுரம் நகராட்சிக்கு சொந்தமான TN 25 R 8367 ஈப்பு வாகனத்தில் பழுதடைந்த A.C. N.S.D. Car , A/c Service & Gas Charge , வந்தவாசி நிறுவனத்திற்கு வாகனம் எடுத்து செல்லப்பட்டு பழுது நீக்கம் செய்யப்பட்டது. மேற்படி பழுது நீக்கம் செய்தமைக்கான கேட்புப் பட்டியல் தொகை ரூ.4800—யை திரு.ஆர்.இளஞ்செழியன், ஈப்பு வாகன ஒட்டுநரின் சொந்த செலவில் செலவினம் மேற்க்கொள்ளப்பட்டது. மேற்படி வாகனத்தின் A.C. பழுது நீக்கம் செய்தமைக்கான தொகை ரூ.4800—யை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

ஒப்புதல் வழங்கலாம்.
ந.க.எண்:2559/2020/இ1

294

**பொருள் எண்:2**

திருவத்திபுரம் நகராட்சியில் 2011 முதல் 2014 வரையிலான நிதியாண்டுகளில் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப்பணிகளுக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகைகளுக்கான தொழிலாளர் வருங்கால வைப்புநிதி ஆணையத்திற்கு செலுத்த வேண்டிய முறையான தொகைகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களால் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு குறித்த விவரங்கள் மற்றும் உரிய தொகை செலுத்தப்படாத காரணத்தினால் EPF Order No.TN/VL/92216/Enf/2017-18 நாள் :17.1.2018ன் படி தொகை ரு.61,14,701.00யை செலுத்தக் கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இந்நகராட்சியின் வங்கி கணக்குகளை மேற்படி ஆணையத்தால் தற்காலிகமாக முடக்கப்பட்டது. மேலும், இந்நகராட்சியின் வங்கி கணக்கில் இருந்து தொகை ரூ.28.00 இலட்சம் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையத்தின் கணக்கில் ஈடுசெய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்:WP.No.6562 of 2018 ன் படி தற்காலிக தடை உத்தரவு பெறப்பட்டது.

தற்பொழுது திரு,பி.சீனுவாஸ், வழக்கறிஞரின் ஆலோசனையின் படி தீர்ப்பாயம் நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு புதியதாக தாக்கல் செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பாய்த்தில் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஆணையத்தின் Order No.TN/VL/92216/Enf/2017-18 நாள் :17.1.2018ன் படி தொகை ரு.61,14,701.00யை

செலுத்தக் கோரி உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞர் மற்றும் இதர கட்டணங்களுக்காக தொகை ரூ.25000.00யை திரு.பி.சீனுவாஸ் ,வழக்கறிஞருக்கு வழங்கவும் மற்றும் வழக்கு தாக்கல் செய்ய பதிவு கட்டணமாக ரூ.2000.00 The Registrar, CGIT , Chennai அவர்களின் பெயருக்கு வங்கி வரைவோலையாக வழங்க ஆகும் மேற்படி செலவினத்திற்கு தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியின் கீழ் செலவினம் மேற்க்கொள்ள தனி அலுவலரின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

வழக்கின் அவசர அவசியம் கருதி செலவினம் மற்றும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்:278/2017/இ1

<u>பொருள் எண்:3</u>

திருவத்திபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நகராட்சி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ள குடிநீர் விநியோக பைப்லைன், சிறுமின் விசைப் பம்பு மற்றும் கைப்பம்புகள் பழுது பார்த்தல் பணி செய்ய விலைப்புள்ளிகள் 28.08.2020ஆம் தேதி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் .

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை. ரூ. |
|---|---|---|
| 1. | திரு.பி.ரவி | ரூ.71600/- |
| 2. | திரு.அ.தனசேகரன் | ரூ.72000/- |
| 3. | திரு.டி.ராஜேந்திரன் | ரூ.73500/- |

மேற்படி பணிக்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி.ரவி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொண்டமைக்கு தனி அலுவலரின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 1203/2020/இ1

**<u>பொருள் எண்:4</u>**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான கிருமிநாசினி 1) பைரத்திரம்–2% [Extract]-100 லிட்டர் மற்றும் 2) டெமிபாஸ்–100 லிட்டர் புதியதாக வாங்கி பயன்படுத்திடவும் இவைக்கான மருந்துகளை TNMSC அங்கீகாரம் பெற்ற நிறுவனமான M/S Paramount Pesticides Lit No.2/3 1st Floor, முத்துகிருஷ்ணன் தெரு, T.Nagar, Chennai-17

என்ற நிறுவனத்தின் மூலம் புதியதாக வாங்கிடவும் இவைக்கான தோராய செலவினத் தொகை ரூ.2.35—க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்து ஐந்தாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>ப.அ.</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன் அனுமதி தனி அலுவலரிடம் பெற்று இப்பணி மேற்கொள்ளவும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722—2020—எச்1

**<u>பொருள் எண்:5</u>** 297

மாவட்ட ஆட்சித் தலைவர் — திருவண்ணாமலை அவர்களின்படி ந.க.எண்.9104—2020—சி4 நாள்: 15.06.2020ன்படி தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியினை அரசு அறிவுரையின்படியான மாஸ்க் அணியாமல் வெளியே வருபவர்களிடம் குழுவாக வாகனம் மூலம் அபராதம் வசூலிக்க வாகனம் (வாடகை அடிப்படையில்) அமர்த்தப்பட்டு வசூலிக்கப்பட்டது. இவ்வாறான வாகனத்திற்கு வாடகை வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் — திருவண்ணாமலை அவர்களின் அறிவுரையின்படியும், வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் அறிவுரையின்படியும் இவைக்கான செலவினத் தொகையாக ரூ.41850—யை 01.08.2020 முதல் 31.08.2020 வரை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>ப.அ.</u> 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதி அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் இப்பணி மேற்கொண்டதையும் இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722—2020—எச்1

**<u>பொருள் எண்:6</u>** 298

தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியினை அரசு அறிவுரையின்படியான மாஸ்க் அணியாமல் வெளியே வருபவர்களிடம் குழுவாக (காவல் துறை, வட்டாட்சியர் துறை, நகராட்சி மற்றும் வட்டார போக்குவரத்து துறையால் வாகன ஏற்பாடு) வாகனம் மூலம் அபராதம் வசூலிக்க வாகனம் (வாடகை அடிப்படையில்) அமர்த்தப்பட்டு அதன்மூலம் வசூலிக்கப்பட்டது. இவ்வாறான வாகனத்திற்கு வாடகை வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர் —

திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண்.9104–2020–சி4 நாள்:15.06.2020–ன்படியும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் தகவலின்படியும் இவ்வாகனத்திற்கான வாடகை 01.09.2020 முதல் 30.09.2020 வரையிலான செலவினத் தொகையாக ரூ.40500–(ரூபாய் நாற்பதாயிரத்து ஐந்நூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)அவசர அவசியம் கருதியும் அரசு வழிகாட்டுதலின்படியும் இப்பணி மேற்கொள்ளப்பட்டதையும், இவைக்கான செலவினத் தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722–2020–எச்1

**பொருள் எண்:7**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப் பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் சுமார் 2 டன் புதியதாக வாங்கி பயன்படுத்திடவும், இவைக்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.40,000–க்கு (ரூபாய் நாற்பது ஆயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு மற்றும் மழைக்காலம் என்பதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722–2020–எச்1

**பொருள் எண்:8**

இந்நகராட்சி அலுவலகத்தில் பொது சுகாதாரப்பிரிவின் பயன்பாட்டிற்கு தேவையான நீர்த்த சுண்ணாம்பு தூள் 2000 KG சப்ளை செய்திட 09.10.2020ஆம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அவை மன்ற அங்கீகாரத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

விவரம்:

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | 1 KG விலை<br>(மொத்தம் 2000 KG) |
|---|---|---|
| 1 | ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ்,<br>நெ.115/90B 2வது தளம்,<br>பெரம்பூர், சென்னை – 11 | 1 KG விலை<br>ரூ.18– (GST உட்பட) |

| | | |
|---|---|---|
| 2 | SB & Co,<br>நெ.1, ESI நகர்,<br>திருவாஞ்சேரி, சென்னை–73 | ரூ.21 |
| 3 | மாஸ்க் என்டர்பிரைசஸ்,<br>நெ.4, M.K.N ரோடு,<br>சென்னை – 32 | ரூ.24.50<br>(GST உட்பட) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் உள்ள ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் & டிரேடர்ஸ், சென்னை அவர்களின் குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் ஏற்றி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார அவசர அவசியம் கருதி இப்பொருள் வாங்கிடவும், இவைக்கான செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.722–2020–எச்1

**பொருள் எண்:9**

301

திருவத்திபுரம் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் 2018–ஆம் ஆண்டு, திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்றும், மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்றும் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது இந்நகரில் தனி நபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, தற்போது திறந்த வெளி இடங்களில் மலம் கழிக்கும் நிலை இல்லை என்று அடுத்த சான்றான ODF+ பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இது குறித்து பொதுமக்கள் தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் எவையேனும் இருப்பின் உரிய தகவலினை 15 நாட்களுக்குள்ளாக ஆணையரிடம் எழுத்து பூர்வமாக தெரிவித்திடும் வகையில் இத்தகவலினை இரண்டு தமிழ் தினசரி நாளிதழில் ஒரு நாள் மட்டும் விளம்பரம் செய்திடவும், மேலும் பணி மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத் தொகை ரூ.8000–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ப.அ. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2)பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் தற்போதிய அரசு வழிகாட்டுதலின்படியும் இப்பணி மேற்கொள்ளவும், இவைக்கு ஆகும் செலவினத் தொகையினையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1139–2017–எச்1

தனி அலுவலர்,
திருவத்திபுரம் நகராட்சி